www.padippakam.com

போர்முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு வந்ததில்லை - புலிகள் -

3-3-1985 ஈழநாடு

விடுதலைப்புலிகள்

- ஈழநாடு -

# 16 போராளிகளுக்கு அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

கொக்கிளாய் ராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது பலியான தமிழீழ விடுதலைப் புலிகளின் 16 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தி அவ்வியத்தால பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

போர் முனைக்குச் சென்றவர்கள் வென்றதுண்டு -. வந்ததில்லை என்ற தலைப்பில் 'ராணுவமுகாம் தாக்குதல்' பற்றி விபரமாக இப் பிரசுரத்தில குறிப்பிடப்பட்டுள்ளது.

''அரசானது தமிழீழ மக்களை தம் பிரதேசத்திலிருந்து விரட்டியடிக்கும் நோக்குடன் சிங்கள சமூகத்திலிருந்து விடுபட்ட சிலருக்கு ஆயுதப்பயிற்சி அளித்தும் ஆயுதமயப்படுத்தியும் தமிழீழ பிரதேசங்களில் குடியமர்த்தும் நோக்குடனும் ராணுவ முகாம்களை எங்கிலும் விஸ்தரித்து வருகின்றது.

''இதன் தொடராக ஆயுதப்பயிற்சியளிக்கப்பட்ட குடியேற்றத்திற்கு முன்னேற்பாடாக கொக்கிளாயில் நவீனரக ராணுவ ஆயுதத் தளபாடங்களுடன் பலப்படுத்தப்பட்ட ராணுவமுகாமொன்று அமைக்கப்பட்டது. இந்த ராணுவ முகாமின் அமைவால் அப்பகுதியில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ்மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதோடு அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டு தம்சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறான அரசின் சகலவகையான அடக்குமுறைகளை தடுக்க வேண்டிய கூட்டுப்பொறுப்பு தமிழீழ விடுதலையை முன்னெடுக்கும் அனைத்து விடுதலை அமைப்புகட்குமுண்டு

''இவ்வகையில் புதியதோர் உத்வேகத்தை கொடுக்கும் வகையில் 13-02-85ல் ராணுவ முகாம் ஒன்று [கொக்கிளாய்] முதற்தடவையாக வெற்றிகரமாகதாக்கப்பட்டது. கடும் விமானத் தாக்குதலிற்கு மத்தியிலும் சுமார் 5 மணித்தியாலங்களாக எமது போராளிகட்கும் ராணுவத்தினர்க்குமிடையே நடைபெற்ற கடும் சமரில் ராணுவ தரப்பில் நூற்றியாறு சிப்பாய்கள் கொல்லப்பட்டு இருபத்தைந்து பேர்கள் படுகாயமுற்றனர். இதேவேளை கொக்கிளாய் ராணுவமுகாமிற்குதவியாக முல்லைத்தீவிலிருந்து அனுப்பப்பட்ட ராணுவ வண்டித் தொடர்மீது ஏனையஎமது போராளிகள் நடாத்திய தாக்குதலில் மேலும்இருபத்தெட்டு ராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ராணுவ வாகனங்கள் சேதமடைந்த நிலையில் ஏனையோர் பின் வாங்கினர். இதன் பிரதிபலிப்பாக அரசியல் ரீதியான சில அனுகூலங்கள் இம்மண் பெற்றிருப்பது எமது முழு வெற்றியையே காட்டுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்த சுவரொட்டிகளும் நேற்று காணப்பட்டன.

## உரிமை கோரி...

கடந்த பெப்ரவரி 22ம்திகதி புளியங்குளத்தில் நடைபெற்ற தாக்குதலின்போது ஜீப்வண்டியில் சென்ற பொலிஸ் அதிரடிப்படையைச்சேர்ந்தபொறுப்பதிகாரி உட்பட ஏழு அதிரடிப்படை பொலிசார் கொல்லப்பட்டதற்கும் தாமே பொறுப்பு என்று அப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[மா]

15/3/85 ஈழநாடு

# மதவாச்சிக்கு புலிகள் உரிமை!

(யாழ்ப்பாணம்)

மதவாச்சிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கும், மதவாச்சி ரயில் நிலையத் தகர்ப்புக்கும் ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' இயக்கம் உரிமை கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதுசம்பந்தமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரை 2லட்சம் கொண்ட சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்கவும், மன்னார் பகுதி மக்கள் விரட்டியடிக்கப்பட்டு, அகதிகளாக்கப்படுவதன் காரணமாகவும், மதவாச்சிக் காடையர்களை எச்சரிக்கும்முகமாகவும் இந்தத் தாக்குதலை நடாத்தினோம். இச்சம்பவத்தில் 8 பொலிசார் மரணமானார்கள்.